# கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்

எ.ம.சா.1 நாள்: 28 .07.2025

**வழக்கு எண் MCOP No. 196/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேம்குமார் | ஊர் | : | மானூர் |
| தகப்பனார் பெயர் | : | துரை ராஜ் | தாலுகா | : | மானூர், திருநெல்வேலி மாவட்டம் |
| தொழில் | : | தலைமை காவலர் HC 1026 | வயது | : | 40/2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**<u>2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் 2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் 10.05.2020 ஆம் தேதியிட்டு எங்கள் காவல் நிலையத்தில் 232/2020 என்ற குற்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை எ.ம.சா.ஆ.1. TN 90 D 5134 என்ற எண்ணுள்ள லாரியின் உரிமையாளர் செந்தில்குமார் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். TN 60 AF 2106 தோஸ்து மினி லாரி மேற்படி நின்று இருந்த லாரியின் மீது அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து தேனி மாவட்டம் பெரியகுளம் நாகராஜன் மகன் கார்த்திக் என்பவர் ஓரமாக நின்று கொண்டு இருந்த செந்தில்குமார் லாரியின் பின் பக்கம் இடது புறத்தில் மோதி சேதத்தை ஏற்படுத்தி

உள்ளார். 161(3) படி சாட்சிகளை விசாரித்து உள்ளார். அதில் மொத்தம் உள்ள 7 வரிசைகளில் 2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பு சான்று ஆவணம் 2 ஆகும். சின்ராஜ் மகன் கணேசன் சம்பவ சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் இல்லை. நாகராஜன் மகன் கணேசன் என்பவர் தான் சம்பவ சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்தை காட்டக்கூடிய பார்வை மகசர் மாதிரி வரைபடத்தின் xerox நகல் **எ.ம.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களுக்கு உரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை xerox நகல் **எ.ம.சா.ஆ.4** ஆகும். மேற்படி விபத்து சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் xerox நகல் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்து சம்பந்தமாக இறந்து போன கார்த்திக்கின் குடும்பத்தினர் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**<u>4 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நாகராஜ் மகன் கார்த்திக் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து சம்பந்தபட்ட குற்ற இறுதி அறிக்கையும் அந்த 4 ஆம் எதிரி மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட நபர் கார்த்திக் என்பவர் சிகிச்சையில் இறந்து விட்டதால் அவர் மீதான குற்றம் அற்று போய் விட்டது என முடிவு செய்யப்பட்டு விட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எந்த விஷயமும் தெரியாது என்றால் சரிதான் ஆவணங்களை பார்த்து அதன் அடிப்படையில் தான் பதில் சொல்கிறேன். இந்த விபத்தில் இறந்து போன கார்த்திக் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன். விபத்து நடந்த கார்த்திக் ஓட்டி வந்த வாகனம் முன்னாள் சென்ற லாரி தீடிரென break அடித்ததால் வாகனத்தை ஓட்டி சென்ற கார்த்திக் திடிரென கட்டுப்பாட்டை

இழந்து லாரியின் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன கார்த்திக் இழப்பீடு பெறுவதற்கும் அதனை தருவதற்கும் ஆயுள் காப்பீடு நிறுவனம் பொறுப்பு ஆகும் என்றால் தெரியாது. இறந்து போன கார்த்தி மீது போடப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை ஆகியவற்றை வைத்து இழப்பீடு தருவதில் இருந்து விலக்கு அளிக்க முடியாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.07.28 10:31:28 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**